



திருவள்ளுவர் ஆண்டு 1979 புரட்டாசி 10
சென்னை, 25—9—48

வீச்சு 6





இதற்குப் பெயர்தான் இனம் ஒழிப்புத் திட்டம்!!

ஜமீன் ஒழிப்பு மசோதாவை வேக வேகமாக சட்டசபையில் நிறைவேற்றுகிறார் காங்கிரஸ் அமைச்சர் காளா வெங்கட்ராவ். வெற்றி! வெற்றி! ஜமீன்கள். ஒழிந்தார்கள் என்று கொக்கரிக்கிறார் முதலமைச்சர். ஆனால் உண்மை என்ன? இந்த மசோதா, ஜமீன்தார்களிடமிருந்து நிலங்களைப் பறித்துக்கொண்டு திற்கு ஈடாக 13 கோடி ரூபாய் தானமளிக்கிறது அவர்களுக்கு! ஆம்! அவர்களை நிலப் பிரபுக்கள் என்ற நிலையிலிருந்து தொழில் முதலாளிகள் என்ற நிலைக்கு மாற்றி அமைத்து மறுகோலம் செய்கிறது! இப்போது அவர்கள் ஜமீன்தார்கள்! அதாவது நில முதலாளிகள்! மசோதா நிறைவேறிய பிறகு, நஷ்ட ஈட்டுத் தொகை 13 கோடியைக்கொண்டு, இந்த ஜமீன்தார்கள் தொழிற்சாலை மன்னர்களாக மாறிவிடுவார்கள்! இதற்குப் பெயர்தான் ஜமீன் ஒழிப்பு மசோதா!!

ஜமீன் ஒழிப்பு இப்படியென்றால் இனம் ஒழிப்பு இதைவிட வேடிக்கை. இனங்களை ஒழிக்க மசோதா கூடகொண்டுவந்துவிட்டார் காளா. ஆனால் கடைசி நேரத்தில் காங்கிரஸ் மேல் இடம் ("டில்லி") குறுக்கிட்டு இனங்களை "என்றும் சிரஞ்சீவிகளாக" ஆக்கிவிட்டது!


அணா.

வெளி-நாடு 2 அணா.

# எப்படி வந்தது இந்த மூட நம்பிக்கை?

**சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் ஓர் அணுக்குண்டு—பழமைக்கு! அவருடைய வாழ்க்கை முழுவதும புரட்சிப் பணியாற்றுவதிலும், வைதிக வம்பர்கட்குக் கசையடி தருவதிலும், விஞ்ஞானக் கருத்துக்களை எளிய தமிழிலே செந்தமிழகத்துக்கு அன்பளிப்பாகத் தருவதிலுமே செலவிடப்பட்டது. விஞ்ஞான ஆராய்ச்சி என்ற போர்வாளைக் கையில் ஏந்தி, மூட நம்பிக்கைகளை முறித்துத்தள்ளிய பெருமை தமிழகத்தில் அவருக்கே உண்டு அவருடைய அந்த வாள் வீச்சுகளில் ஒன்று; இக் கட்டுரை. படியுங்கள், வாளின் கூர்மையைப் படித்தறியுங்கள்.**

உலகத்தில் இருந்துவரும் மூட நம்பிக்கைகளில் சிலவற்றை மெஞ்ஞான முறைப்படி விசாரித்து வந்ததில் அவை இரண்டு காரணங்களால் உண்டாயிருக்க வேண்டுமென அறிந்தோம். அவையாவன, வெறும் பழக்க வார்த்தைகளைக் கொண்டே பல மூட நம்பிக்கைகள் நிலைத்து வருகின்றன. இரண்டாவது ஏக தேச சந்தர்ப்பங்களிலிருந்து மூட நம்பிக்கைகள் பிறந்திருக்க வேண்டுமெனவும் தெரிந்துகொண்டோம். சில மூட நம்பிக்கைகளுக்கு நமது ஆசையே (Our wish) காரணமாய் இருக்கலாமெனவும் தெரிந்தது. இந்தக் காரணமொன்றே பல பொய் நம்பிக்கைகளின் மேல் வைத்துள்ள விசுவாசத்திற்கு ஆதாரமென அறிதல் வேண்டும். நமது ஆசையின்படியே விஷயங்கள் நமக்கு அனுகூலமாகவே வேண்டுமென்ற மனப்பான்மை பெரும்பாலாருக்குண்டு. இந்த மனப்பான்மையாலேயே ஜோசியத்தின் மேலும், ஜாதகத்திலேயும், குறி சொல்லும் விஷயங்களிலேயும், கைபார்ப்பதிலேயும் மைபோட்டுப் பார்ப்பதிலேயும் நம்மவர்களில் பலருக்கு நம்பிக்கை ஏற்படுகின்றது. கஷ்டப்படாமலே நமக்குச் செல்வம் வராதா? நாம் முயற்சி செய்யாமலே நம்மை விட்டுப் பிரிந்தவர்கள் திரும்பி வரமாட்டார்களா? உழைப்பின்றி சம்பத்தும், செல்வமும், கீர்த்தியும் வராதா? என்ற நோக்கங்கள் நமது மனதில் அடுத்து அடுத்து எழுவதால் ஆருடம் என்ன தெரிவிக்கின்றது? குறி சொல்லுகிறவன் நமக்கு என்ன ஆதாரமளிக்கின்றான்? கை ரேகை என்ன குறிக்கின்றது? என்று அறிய அவாக்கொண்டு இந்த மோச வார்த்தைகளின் மேல் நம்பிக்கை வைக்கின்றோம்.

குறிசொல்லும் விஷயங்களில் நமது பாமர ஜனங்களுக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு. நமக்குப் பல குறைகள் நேரிடுகின்றன. இந்தக் குறைகளை நீக்கிக்கொள்ள ஆசைமென்மேலும் உண்டாவது சகஜம். இந்த ஆசையால் குறி சொல்லுவது மெய்யோ பொய்யோ நம்முடைய கோரிக்கைப்படி நிறைவேறும் என்று அவன் சொல்லுகின்றபடியால் அவன் சொல்லின் மேல் நம்பிக்கை ஏற்படுகிறது. குறி சொல்வார் யார் என்று பார்ப்போம்.

குறிமேடையில் குறிசொல்லுகிறவர்களில் பலர் நரம்பு வியாதியால் (Nervous Disorder) பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் எளிதில் கோபம், சந்தோஷம் அடைவார்கள். (Easily Excited) இவர்களுடைய ஆடம்பரங்கள் பாமர ஜனங்களின் மனதை உருகச் செய்து விடுகின்றன. உடுக்கை சிலம்பு முதலிய வாத்தியங்கள் குறி கேட்க வந்திருப்போரை ஓர்வித மயக்கமுண்டாக்கக் கூடியனவாக இருக்கின்றன. குறி சொல்லும் இடங்களில் மதுரை வீரன் படமும், அதில் குதிரைசவாரி நாய்களுடன் செய்வதாக வரையப்பட்டு, தொங்கவிட்டிருக்கும். குறிசொல்பவனும் பகல் வேஷத்திற்குரிய திருநீறு, குங்குமம் முதலியவற்றை உடல் முழுமையும் பூசிக்கொண்டு கழுத்தில் பொன் உத்திராக்கம், கைகளில் பொன் தோடா, பட்டாடை முதலிய வஸ்திரங்களை அணிந்து, உடுக்கை சிலம்புடன் அவன் "இஷ்ட தேவதையை" வசியமாக்க முயற்சி செய்வான். இந்த வேஷங்களைக் கண்டோர் மயங்கி விடுகின்றார்கள். இவர்கள் மயக்கத்தை அதிகரிக்க, உடுக்கையையும் சிலம்பையும் உரத்துத் தட்ட ஆரம்பிப்பான். அவனுக்கு ஆவேசமும் வருவதாக நடிப்பான். இந்த ஆவேசத்திற்கு வேண்டிய மதுபானமும் அருந்துவதோடு புட்டியிலும் சாராயம் மதுரை வீரனுக்காகப் படையல் போட்டிருக்கும். வேலை ஒன்றுமில்லாத வீணர்கள் அந்தக் குறிமேடைகளில் சென்று பக்திவான்களைப் போல் நடிப்பார்கள். இந்தச் சூதை அறியாத பெண்கள் தங்கள் குறைகளைத் தெரிவிப்பார்கள். இவைகளை ஏதோ அலட்சியமாகக் கேட்டு அதற்கு ஏதோஓர் பரிகாரத்தைத் தெரிவிப்பான், இந்தப் பித்தலாட்டங்களுக்கு ஏமாந்து கையிலிருக்கும் பணத்தையோ, நகையையோ, தட்சணையாகக் கொடுப்பார்கள். இந்த விதமாக அந்தப்பெண்கள் "மதிமோசம்" போவார்கள்.

முக்கியமாக பெண்கள் பிள்ளை வரம் பெற குறி மேடைகளுக்குப் போவதைப் பார்க்கலாம். அல்லது தனக்கும்தன துகணவனுக்குமுள்ள மனஸ்தாபத்தைக் குறித்து குறி கேட்கப் போவதுமுண்டு. இந்த இரண்டு விஷயங்களைக் குறி சொல்லுகிறவன் எப்படித் தீர்ப்பானோ என்று விசாரிப்பதே கிடையாது. இதைப்போன்ற மூடநம்பிக்கையைக் காண்பதரிது. பிள்ளை பிறப்பதற்கு ஆண் பெண் இருவர் உடலும் தக்க பருவத்தில் இருத்தல் வேண்டும். ஆயிரக்கணக்கான ஆண் பெண்களுடைய உடல் பக்குவப்பட்டு இருப்பதால் அவர்க

**வாயிலில் வறியரை வளர்த்திடல் அன்போ?**

ளுக்கு சந்ததி விருத்திக்குத் தடையொன்றுமில்லை, ஆனால் ஏகதேசமாக ஏதோ ஒருவர் இருவருக்கு உடல் பக்குவமில்லாமலிருக்கும், அதனால் கர்ப்பம் தரிக்க முடியாமற் போகும், இதனையும் தீர்த்துக் கொள்ள அவுஷதங்களும், சிகிச்சைகளும் இருக்கின்றன. மலட்டு ஸ்திரீ புருஷர் சிற்சில சிகிச்சையால் சந்தான விருத்தி பெறுகிறார்கள். அப்படியும் சிலருக்கு குணப்படுவதில்லை. மலட்டு ஸ்திரீ புருஷர்களைப் போல் (Sterile man and woman) மலட்டு ஆடும், மாடும், புழுப் பூச்சிகளும் செடிகளும், மரங்களும் உலகில் ஏகதேசமாக இருக்கின்றன. விளையாத நிலங்களும், சில இருக்கின்றன. இவைகளை ஏதாவது செடி, மரம், புழு, பூச்சி, ஆடு, மாடுகளை உற்பத்தி செய்ய (Reproduce) மதுரை வீரனால் முடியாதிருக்க, ஸ்திரீ புருஷர்களை மாத்திரம் பிரஜா விருத்தி செய்வதென்றால் யார் நம்புவது? இதை முட்டாள்கள் தான் நம்பக்கூடும்? பிரஜாவிருத்திக்குத் தடையை நீக்க டாக்டர்களுக்கே தெரியுமே அல்லாது மோசக்காரர்களாகிய' (Mountebanks and Charlatans) குறி சொல்லுகின்றவர்களுக்கு ஒன்றும் தொரியாது. மதுரை வீரன் படத்தாலும் உடுக்கை சிலம்பாலும், தீபத்தின் சுடர் அசைவாலும் மலட்டுத்தனம் நீங்குமாயின் இவ்வளவு சுலுவாக கோடான கோடி சதுப்பு நிலங்களை விளையவைக்கலாமே! பதர் நெற் (Chaff) கதிர்விடச் செய்யலாமே! சில சமயங்களில் குறிகேட்கப் போனவர்களுடைய கோரிக்கைகளைக் குறி சொல்லுகின்றவன் அவர்கள் அவனிடம் சொல்லாமலே அவன் தெரிந்து கொண்டவன் போல் தெரிவிக்கிறான். இதை மாயாவரத்தில் Spiritualism) எண்ணத்தைத் தெரியப்படுத்தாமலே தெரிந்து சொல்வதென்று (Thought Reading) கூறுவார். இதனை மறைவான ஞானமெனவும் Occultism) கூறுவார்கள். இந்தத் தந்திரத்தைத் தெரிந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள். ஒரு சிறு புத்தகமாகிய (Evidence for the Supernatural by Ivor Tuckett இதனை வாங்கிப் படிக்கலாம். இந்தக் குறிவித்தையில் சிலமோசங்கள் நடக்கின்றன. சிலஇடங்களில் ரகசிய ஆட்களைக்கொண்டுவிசாரித்துத் தெரிந்துகொண்ட பிறகுகுறி சொல்லுகிறார்கள். சாதாரணமாக குடுகுடுப்பைக்காரர்கள் இந்த மோசத்தைச்செய்கிறார்கள். சிலர் தங்களுடைய குறைகள் உதடு அசைவதாலும் கைவிரல்கள் ஆடுவதாலும் மெதுவாகத் தங்களுக்குள்ளே பேசிக்கொள்வதாலும், தங்கள் முகப்பார்வையாலும் தெரியும்படி செய்கின்றார்கள். கூர்மையான பார்வை யுடையோனாகிய குறி சொல்வோன் இந்த சைகைகளைக் கொண்டே அவர்களுடைய எண்ணங்களைத் தெரிந்துகொள்கின்றான். குறி சொல்லுகின்றவன் கேட்கும் கேள்விகளுக்குக் கொடுக்கும் விடைகளாலேயும் தங்களுக்குத் தெரியாமலே தங்கள் கோரிக்கைகளை வெளியிட்டுவிடுகின்றார்கள்! இத்தியாதி தந்திரங்களால் குறி சொல்லுகின்றவன் தன்னைப் பிறர் நம்பும்படி செய்கின்றான். இந்த சூழ்ச்சிகளை அறியாத பாமர மக்கள் குறிகாரன் சொல்வதெல்லாம் மதுரை வீரன் அருளாலென்றும், தெய்வீகத்தன்மையாலென்றும் மதிமயங்கி மூட நம்பிக்கையை வளர்த்து வருகின்றார்கள். இந்தக் குறிமேடைகளில் எத்தனை பெயர் தங்கள் பொருளை இழந்தவர்கள்! மதியை இழந்தவர்கள்! மானத்தை இழந்தவர்கள். இவைகளுக்குக் கணக்கில்லை! ஆனால் நமக்கும், நமது நாட்டுக்கும்நன்மை பயக்க நமது சுயமரியாதை இயக்கம் அதிர்ஷ்ட வசமாகத் தோன்றி இத்தியாதி மோசங்களை வெளிப்படுத்தி வருவது நம் நாட்டின் பாக்கியமேயாகும்.

### கை ரேகை குறி.

(Palmistry) அதாவது கை பார்த்துக் குறி சொல்லும் வித்தையொன்றுளது. கைரேகைகளைப் பார்த்து குறவர்கள் (Nomads) சாதாரணமாகக் கிராமங்களில் குறி சொல்வதுண்டு. குடுகுடுப்பைக்காரனும் இவ்வித குறிகளைச்


## சிறந்த வெளியீடுகள் :

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஈரோட்டுப் பாதை (இளஞ்செழியன்) | 0 | 6 |
| சித்திரபுத்திரன் (பெரியார்) | 0 | 6 |
| புதியதோர் உலகு (பெரியார்) | 0 | 6 |
| திராவிடஸ்தான் வேண்டாமா | 0 | 8 |
| காரல் மார்க்ஸ் | 1 | 0 |
| எது இசை | 0 | 6 |
| திராவிடர் நாகரிகம் | 0 | 10 |
| தமிழர் யார் | 0 | 8 |
| ஆரியர் தமிழர் கலப்பு | 0 | 8 |
| தமிழ் பழமையும் புதுமையும் | 0 | 8 |
| தேன் கூடு (கவிதை) | 0 | 2 |
| தமிழ் ஆராய்ச்சி | 0 | 6 |
| தமிழ்க் கடவுளுக்கு ஆரியப் பாடலா | 0 | 4 |
| பெண்ணே பெரியவள் —ஏன் | 0 | 8 |
| பெண்கள் உலகம் | 0 | 12 |
| மனிதன் எப்படித் தோன்றினான் | 0 | 8 |
| தமிழரின் மறுமலர்ச்சி | 0 | 8 |
| தமிழர் சமயம் | 0 | 8 |
| ஆரிய வேதங்கள் | 0 | 10 |
| மரணத்தின்பின் | 0 | 8 |
| சிந்துவெளித் தமிழர் | 0 | 8 |
| ஐக்கிய திராவிடம் | 0 | 12 |
| இராவணன் வித்தியாதரனா | 0 | 6 |
| இந்தியாவில் சோஷலிசம் | 0 | 12 |
| இந்துமதம் தமிழர் மதமா | 0 | 8 |
| தமிழர் சமயம் எது | 0 | 8 |
| கவிஞர் விழா | 0 | 6 |
| புரட்சிப் பெண் | 0 | 8 |
| திராவிட மொழிகளும் இந்தியும் | 0 | 6 |

கிடைக்குமிடம் :

**பகுத்தறிவுப் பாசறை**

147, பவழக்காரத் தெரு,
சென்னை 1.


**மடத்தில் விணிற் பொருளைக் கொடுத்திடல் அன்போ ?**

சொல்லுகின்றான். பண்டார வேஷம் போட்டுக்கொண்டு, ஓலைச் சுவடியொன்றைக் கையிலேந்தி, கையைப் பார்த்துக் குறி சொல்லும் வேஷக்காரர்களை சென்னைத் தெருக்களிலும் நாட்டுப்புறங்களிலும் பார்க்கலாம். நமது சென்னை மூர் மார்க்கட்டு (Moore Market)க்கு அருகாமையில் அனேகர் ஆருடம் அதாவது ஓர் விதக்குறி சொல்லிப் பிழைக்கின்றார்கள். கையைப் பார்க்கிறான், ஓலைச் சுவடியையோ, அல்லது காகிதச் சுவடியையோ திருப்புகின்றான். உடனே உனது காரியம் கைகூடுமென்கின்றான். உனது மகன் திரும்பி வருவான் என்கின்றான். உனது புருஷனுக்கு வேலை கிடைக்குமென்கின்றான். இத்தியாதி அற்ப விஷயங்களைத் தான் தெரிந்து சொல்லுவதுபோல நடித்து இந்தக் குறி சொன்னதற்கு கால் அணா அதாவது மூன்றுபை பெறுகின்றான். இந்த ஏழை சொல்லும் குறிக்கும், 'இந்து' முதலிய பேப்பர்களில் விளம்பரப்படுத்தும் பிரசண்ட சோதிடருக்கும் ஒன்றும் வித்தியாசமில்லையென அறிக. ஒரே வித்தியாசமுண்டு. அதாவது ஒருவன் காலணாவுக்குக் குறியோ, சோதிடமோ, ஆருடமோ சொல்கின்றான். மற்றொருவன் ஒரு ரூபாய் முதல் 5, 10, 15, வரை பெறுகின்றான். இரண்டு பேரும் சொல்லும் சோதிடங்களில் ஒன்றும் மெய்யில்லை. எல்லாம் மனமயக்கே. பொய்யை நம்புவதற்கு வெறும் நம்பிக்கை (Simple Belief) தான் வேண்டும். லண்டன் பட்டணத்தில்கூட சில பெரிய தெருக்களில் கொட்டை கொட்டையான எழுத்துக்களால் 'இங்கு கைபார்த்துக் குறி சொல்லப்படும், இங்கு எல்லாக் குறைகளும் நிவர்த்திக்கப்படும்' என்றுவிளம்பரமிடும் விளம்பரப் பலகைகளைப் பார்க்கலாம். அங்கும், இங்கும், எங்கும் பாமர ஜனங்கள் தங்கள் சஞ்சலங்களை கிரமமான வழிகளில் போக்கிக்கொள்ளாமல் மூட சோதிடனிடம் குறி கேட்டு மயங்குகின்றார்கள். அறிவை இழந்தவர்கள்தான் இத்தியாதி பித்தலாட்டங்களுக்கு இடம் கொடுப்பார்களேயொழிய அறிவுடையார் இந்த மூட நம்பிக்கைகளுக்கு இடம் கொடார்கள். உலகில் கோடான கோடி மக்கள் காலை முதல் மாலைவரை உழைத்து தங்கள் ஜீவனத்தைச் செய்து உயிர் பிழைத்து வருகின்றார்கள். ஆனால் சிலர் வேலையொன்றும் செய்யாமல் சோம்பல் கொண்டு, அறிவையும் வளரச் செய்யாமல் பகுத்தறிவையும் கொன்று சிற்சில மோச வார்த்தைகளைக் கேட்டு ஓர் வித ஆறுதலை அடைகின்றார்கள். சோதிடம், ஆருடம், குறி முதலிய வித்தைகள் ஒரு வகுப்பார் பிழைக்க ஏற்படுத்திக்கொண்ட உபாயங்களென அறிக. மெஞ்ஞான முறையால் இனிவரும் சம்பவங்களை அறிவதுபோல் இந்தக் குறிகளாலும், சோதிடத்தாலும், கைக்குறிகளாலும், ஒன்றும் தெரிந்துகொள்ள வகை இல்லை. எங்கும் தெரிந்துகொண்டவருமில்லை. சோம்பேரிகள் மனத்திருப்திக்காக (Mental Satisfaction) உண்டாக்கிக்கொண்டது இந்த வித்தைகளேயொழிய பொது மக்களுக்கு பொதுப் பிரயோசனத்துக்கு ஏற்பட்ட வித்தைகள் அல்லவென அறிதல்வேண்டும்.

கையிலுள்ள கோடுகளைப் பார்த்து ஜோஸ்யம் சொல்லுவது உலக முழுமையும் பரவியுள்ள ஓர் வித்தையாகும். அது வெறும் பழக்கமே அல்லாது உண்மையல்ல. நமது கையிலுள்ள கோடுகளைப் போல் நமது ஒரு காலத்து பூர்வப் பங்காளிகளாகிய வாலில்லாக் குரங்குகளுக்கும் உண்டு. இன்னும் தூரபங்காளிகளாகிய (Distant Cousins) வாலுடைய குரங்குகளுக்கும், கையில் கோடுகள் இருக்கின்றன. ஆனால் காட்சி சாலைகளில் வசிக்கும் காட்டு மனிதக் குரங்குகளின் கைகளில் இருக்கும் கோடுகள் (Grooves) பூர்வ காலத்தில் நமது குரங்கு மூதாதைகள் மரத்தில் தாவிப்பிடித்து தாண்டுங்காலையிலுண்டான தோல் மடிப்புகள். அந்த வம்சத்திலிருந்து வந்தவர்களாகிய நமக்கும் அந்த மடிப்புகள் பரம்பரையாகத் (Hereditory) தோன்றுகின்றன. நமது கைக்கோடுகள் காட்டுக்குரங்குகளின் வம்ச பரம்பரையாக வந்தவை. பல கோடி வருஷங்களாக நமது மூதாதைகள் மரங்களில் வாழுங்காலை தாவுவதற்கு தங்கள் கைகளை உபயோகித்து வந்து இருக்கவேண்டும். இன்றைக்கும் வாலுடைய குரங்குகளும், வாலில்லாக் காட்டு மனிதக் குரங்குகளும் அம்மாதிரியாக தாவிச் செல்கின்றன. அப்படித் தாவிச் செல்வதால் கைகளும் மடிக்கவேண்டி வருகின்றன. கைகள் மடியுண்ட இடங்களில் வரி வரியாகக் கோடுகள் உண்டாயின. அப்படி உண்டான கோடுகள்தான் அந்த சந்ததி மூலமாக நமக்கும் வந்திருக்கின்றன. இதுதான் நமது உள்ளங்கைகளில் உண்டாயிருக்கும் கோடுகளின் பிறப்பு. மரத்தைத்தாண்ட மடிந்த இடங்களைக் கொண்டு நமது நடத்தைகளை எப்படி அறியக்கூடுமெனக் கேட்கின்றோம்? இரண்டு வரி ஐந்தாம் விரலுக்குக் கீழ் இருந்தால் அவனுக்கு இரண்டு பெண்ஜாதியாம்! ஆனால் ஒரு வரியுடைய பலருக்கு பல பெண்ஜாதிகள் இருப்பதைக் காணலாம்!! ஆதலின் இந்த வரிசைகளைக்கொண்டு நமது நடவடிக்கைகளைக் குறிப்பது ஆங்கிலத்தில் (Pure guess) என்று சொல்லலாம். அதாவது வெறும் உத்தேசம்! இந்த வெறும் உத்தேசத்தை உண்மையென நினைத்துக் கொண்டு மோசம் போகின்றவர்கள் அனேகர் உளர். இந்த ஆதாரத்திற்கு இன்னொரு ஞாயமும் உண்டு. விரல்கள் மடியும் இடங்களில் கோடுகளைப் பார்க்கலாம். விரல்கள் மடியுண்டபடியால் விரல் மடிப்புகளிலெல்லாம் விரல் வரிகள் தோன்றியுள்ளது. இப்பிரத்தியட்சக் காட்சிபோலவே மற்ற கை வரிகளும் தோன்றியுள்ளது. ஆனால் விரல் மடிப்புகளைக்கொண்டு நமது நடவடிக்கையைக் குறிக்கும் கைக்குறி சொல்வோர் இல்லை எனக் கருதுகின்றேன். அந்த விரல்மடிப்புகள் பிரயோஜனமில்லையெனில் மற்ற கை மடிப்புகள் மாத்திரம் பிரக்யாதி பெற்றது எவ்விதம்?

(12-ம் பக்கம் பார்க்க)

**ஓய்வறியார் உறங்க இடம்தரல் உயர்வா ?**

சிந்தனைச் சிறுகதை :

# இளம் பெருவழுதி!

"முடியரசன்"

"இதோ பார்! தாமரைத் தடாகம்—அங்கு நீராடும் பாவையர்—அவர்கள் முகத்திற்கும் அங்கு மலர்ந்துள்ள மலருக்கும் நிறத்தால் ஒரு சிறிது வேறுபட்டுத் தோன்றும் தன்மை—அடடா! எவ்வளவு அழகாக எழுதப்பட்டிருக்கின்றன! இவை பல நூற்றாண்டுகளுக்கு முன் தீட்டப்பட்ட ஓவியங்கள். இவை இன்னும் புதுமை கெடாது காட்சி யளித்துக்கொண்டிருக்கின்றன. அந்த வண்ணக் கலையையும்—ஓவியனின் கைத் திறனையும் என்னென்பது!"

"இங்கே பார்! வாய் திறந்து பேசும் சிற்பங்களை! அண்மையில் சென்று தொட்டாலல்லது அவை சிற்பம் என்று தோன்ற. பழங்காலச் சிற்பிகளின் திறமை—கற்பனை அனைத்தும் பொய்க்கும் புனைந்துரைக்கும் பயன்படவில்லை. கலைக்கே பயன்பட்டது. நாட்டியக்கலை—வாழ்க்கைக்கலை இவை தான் அவன் உளி நுனியின் படைப்பாக இருக்கும். அதோ ஆடும் பெண்ணைப் பார்! அவள் விரலை — முகபாவத்தை — இடையின் நெளிவை உற்று நோக்கு! அப்பொழுது அதைப் படைத்த சிற்பி உன் கண்ணுக்குத் தெரிவான். அடுத்ததைப் பார்! அவள் காதலைப் பெற அவன் கெஞ்சும் தோற்றத்தில் நிற்கும் எழிலைப் பார்! அந்தச் சிற்பியின் உழைப்பை — உள்ளக் கற்பனையைப் பாராட்டாமலிருக்க முடியுமா?"

"இது யார் தாத்தா? யாரோ அரசர்போலத் தோன்றுகிறதே!"

"ஆம் அரசனேதான்! அவன் உன் முன்னோரின் வழித்தோன்றல். மானத்தைப்பெரிதென மதிப்பவன். புலிநிகர்வீரன். தன் ஆற்றல் போற்றாது இகழ்ந்துரைப்பவர் எவரேனும் உளராயின் அவரை யானைக்காலகப்பட்ட மூளை போலப் பொன்றச் செய்வான். ஏக பத்தினி விரதன்."

"ஓ! ராமபிரானா!......அப்படியானால் அருகில் சீதையையும் அனுமானையும் காணவில்லையே தாத்தா!"

"தம்பி! அவர் ராமனுமல்ல பிரானுமல்ல. 'ஏக பத்தினி விரதன்' என்றால் உடனே ராமன் தான் என்று எண்ணும் நிலைக்கு நீ பழக்கப்பட்டிருக்கிறாய். உன் இனத்தவனை அறியாத வகையில் மறைக்கப்பட்டிருக்கிறாய். அது உன் குற்றமல்ல. உனக்கும் இராமனுக்கும் என்ன சம்பந்தம், உன் முன்னோனின்—இராவணனின் பகைவன் என்பதைத் தவிர! ஆயினும் அவன்தான் உங்கள் போற்றுதலுக்கு உரியவனாகத் திணிக்கப்பட்டிருக்கிறான். உன் முன்னோன் வீரத்தை — மனப் பண்பைப் போற்ற முடியாமல் உறங்கிக் கிடக்கும் ஏ தமிழகமே! நீ என்று விழிப்புநிலை அடையப்போகிறாய்? ......அது கிடக்கட்டும் தம்பி! இவன் இராமன் அல்ல. உன் முன்னோருள் ஒருவன். மறத்தமிழன். மனைவியையன்றி மற்ற பெண்களை மனத்தாலும் தீண்டாதவன். பெயர் சோழன் நலங்கிள்ளி, இத்தகைய வீரனை — பிறனில் விழையாப் பெருந் தகையானைத் தமிழகம் மறந்துவிடும் என்று கருதித் தான் போலும் இந்த அழியாச் சிற்பமாக ஆக்கித் தந்திருக்கிறான் சிற்பி"

"தாத்தா! இந்தப் பெண் யார்? இவ்வளவு அழகிருந்தும் துறவுக் கோலத்துடன் இருக்கிறாளே!"

"அவள்தான் உன் நாட்டுப் பெண்மணிகளின் கற்புக்கு, நற்சான்று பகரும் நங்கை!"

"திரௌபதியா தாத்தா?"

..............................

"ஏன் நகைக்கிறீர்கள்?"

"நகைப்பு வராமலிருக்குமா தம்பி, நீ சொல்வதைக் கேட்டால். உன் நாட்டுக் கற்புக்குத் திரௌபதியா எடுத்துக்காட்டு. துக்கத்தின் அடிப்படையிலிருந்து எழுகிறது என் நகைப்பு. இரக்கத்தின் எதிரொலிதான் அந்த நகைப்பு. தமிழ்க் கற்புக்கும் திரௌபதி கற்புக்கும், நிலத்திற்கும் நிலவிற்குமுள்ள தொலைவு தம்பி. இங்கு காட்சியளிப்பவள் திரௌபதியல்ல. இவள் மாதவி!"

"மாதவியா! என்ன தாத்தா எனக்கு மிகவும் விந்தையாக அல்லவா இருக்கிறது! பரத்தையர் மரபில் வந்த மாதவியைக் கற்புக்கு—அதுவும் தமிழ்க் கற்புக்கு எடுத்துக்காட்டு என்று சொல்லுகிறீர்களே!"

"ஆம்! அவள் பரத்தைதான். ஆயினும் அவள்பாற் கண்ட கற்புத்தன்மையை, தமிழரல்லாதாரிடம் காண்டல் மிகமிக அரிது. கோவலனையன்றி எவரையும் கருதினாளில்லை. அவனிறந்தான். இவள் எல்லாம் துறந்தாள். மகள் மணிமேகலையையும் துறவியாக்கினாள். பரத்தை என்று கூறப்படும் மாதவிபால் காணும் இத்தகைய கற்பு நெறி, பத்தினி—பட்டத்தரசி என்று கூறப்படும் திரௌபதியிடம் காணமுடியுமா? 'கணவரல்லாத மற்றொருவனிடம் இன்பம் நுகர என் மனம் விழைகிறது' என்று மானங்கெட்டு—கணவன்மார் ஐவரும் அருகிருக்க—அண்ணனிடம் கூறும் திரௌபதி கற்புக்கும்

(8-ம் பக்கம் பார்க்க)

ஊரை வளைக்கும் குருமார் செயல் உயர்வா?

போர்வாள்

25—9—48 சனிக்கிழமை

## ஓமந்தூராரின்

## "திராவிடஸ்தான் !"

"ஜமீன் இனம் ஒழிப்பு மசோதா கொண்டு வந்து விட்டீர்களா? அவ்வளவு ஆணவமா உங்களுக்கு? நடப்பது முதலாளித்வ புரோகிதத்வ கூட்டு சர்க்கார் என்பது தெரியாதா உங்கள் உள்ளத்திற்கு! மசோதாவி லிருந்து இனம்களை விலக்கு முதலில்!"

"சட்டசபையில் ஏற்கனவே மசோதாவைக் கொண்டு வந்துவிட்டோமே! இனி, இனம்களை விலக்கினால் நாடு நகைக்குமே! அது முறையல்லவே!"

"யார் சொன்னது முறை அல்ல என்று? யாருக்கு உரிமை இருக்கிறது சொல்ல? அது யார் எங்கள் சொல்லை மீறிப் பேசுபவர்கள்—பிடித்து அடை சிறையில் அவர்களை! வடநாட்டு மேலிடம் நாங்கள்—எங்களை எதிர்த்துப் பேசும் அளவுக்கா துணிந்துவிட்டார்கள் உங்கள் தென்னாட்டவர்கள்! விலக்கு இனம்களை! விலக்கு! உடனே விலக்கு! இனம்கள் ஒழிந்துபோனால் பிராமண ஆதிக்கமே ஒழிந்துவிடும்! நம்ம சுதந்தர சர்க்காரிலா பிராமண ஆதிக்கத்துக்குக் கேடு தேடுவது? கூடாது! வாழ்க பிராமணீயம்! விலக்கு இனம்களை!"

"மன்னிக்கவேண்டும், மன்னிக்கவேண்டும். இனம்களை விலக்கி விட்டோம். தங்கள் திருவுள்ளம் இப்படி இருக்கும் என்று தெரிந்திருந்தால் இனங்களை இந்த மசோதாவில் சேர்த்தே இருக்கமாட்டோமே!"

"சரி சரி! முகஸ்துதிக்கென்ன குறைச்சல்! இனம்களுக்குப் பாதுகாப்பு அளித்தாயிற்று?"

"ஆஹா! தாராளமாக!"

"அதுமட்டும் போதாது! ஜமீன்களுக்கு நஷ்ட ஈடு 2 கோடி போதாது 10 கோடி தரவேண்டும்—ஜமீன்கள் நம் செல்லப் பிள்ளைகள் தெரியுமா?"

"10 கோடியா! ஐயோ! எங்கள் பொக்கிஷத்தில் 10 கோடி கிடையாதே!"

"கிடையாதா? கொடுத்துத்தான் ஆகவேண்டும். முதலாளித்வத்துக்குப் பாதுகாப்பு அளிப்பதுதான் நம் சுயராஜ்ய சர்க்காரின் முதல் நோக்கம். கொடு 10 கோடி நஷ்ட ஈடு, இல்லையானால் மசோதாவையே வாபீஸ் வாங்கு!"

"அபசாரம்! அபசாரம்! 10 கோடி கொடுத்து விடுகிறோம்; தங்கள் சித்தம் எங்கள் பாக்கியம்!"

"என்ன சொன்னோம் 10 கோடியா கொடுக்கச் சொன்னோம்? போதாது! 13 கோடி கொடுக்க வேண்டும்..........."

"அப்படியே செய்கிறோம்"

"அப்படியே செய்கிறோமா? எப்படி செய்வீர்கள்? ஏது உங்களிடம் அவ்வளவு பணம்! மசோதாவிலிருந்து ஜமீன்களையும் விலக்கி விடுங்கள்!"

"அது எப்படி முடியும்? இனம் ஜமீன் ஒழிப்பு மசோதாவை நாங்கள் தயாரித்தோம்—பிராமணோத்தமர்களின் சுக வாழ்வை முன்னிட்டு இனம்களை மசோதாவிலிருந்து விலக்கச் சொன்னீர்கள்—விலக்கினோம். மிச்சம் இருப்பது ஜமீன் ஒழிப்பு மசோதா! இதிலிருந்து ஜமீன்களையும் ஒழித்துவிட்டால் பிறகு மசோதாவே இருக்காதே!"

"ஆமாம்! மசோதாவையே ஒழித்துவிடுங்கள்! இப்போதென்ன அவசரம் ஜமீன்களை ஒழிக்க!"

"என்ன அவசரமா? பாடுபட்டுப் பயிரிடும் குடியானவர்கள் சிக்கிச் சிதைகிறார்களே சுக போக ஜமீன்தார்களின் சுருக்குக் கயிற்றுக் கிடையே! தெரியவில்லையா உங்களுக்கு?"

"ஏது நீங்கள் கூட கம்யூனிஸ்ட்களாகிவிட்டீர்களோ!........வீண் வார்த்தைகள் ஏதுக்கு? ஜமீன்களை ஒழிப்பது கூடாது! ஆமாம்! மசோதாவை வாபீஸ் வாங்கத்தான் வேண்டு! இது எம் கட்டளை"

"பணிய முடியாது!"

"பணிய முடியாதென்றால் 13 கோடி நஷ்ட ஈட்டுத் தொகை முழுவதும் நீங்களேதான் கொடுத்தாகவேண்டும். நாங்கள்—மத்திய சர்க்கார் ஒரு பைசாவும் கொடுக்கமாட்டோம்!"

**மாதர்தம் உரிமை மறுப்பது மாண்பா?**

"கொடுக்க மாட்டீர்களா, கொடுக்கவேண்டியது உங்கள் கடமை! நீங்கள்தான், ஆதியில், இந்த மசோதாவைக் கொண்டுவரச் சொன்னவர்கள்! ஆகவே நீங்கள் பணம் தர வேண்டியது தர்ம நியாயம்! நியாயத்தை மீறப் போகிறீர்களா?"

"வெறும் வேதாந்தம்!"

"வேதாந்தமல்ல—மனிதப் பண்பு, கடமை!"

"முடியாது! முடியாது! ஜமீன்களை காப்பாற்றித்தான் ஆகவேண்டும்!"

"அதுதான் முடியாது! ஜமீன் ஒழிப்பு மசோதா நிறைவேறியே தீரும்! நீங்கள் பணம் தராவிட்டால் எங்களால் முடிந்தவரை நாங்கள் நஷ்ட ஈடு தருகிறோம்! மசோதாவை நிறைவேற்றி விட்டு, வேண்டுமானால், இரண்டொரு மாதங்களுக்கோ, தேவைப்பட்டால், இரண்டொரு ஆண்டுகளுக்கோ, அது அமுலில் வரும் தேதியை ஒத்திப்போடுவோமே தவிர, அந்த மசோதாவை வாபீஸ் வாங்க முடியாது!"

"ஏன் முடியாது?"

"முடியாது! நிச்சயமாக முடியாது! ஜமீன் ஒழிப்பு மசோதாவை வாபீஸ் வாங்கிவிட்டால் பிறகு நாங்கள் எங்கள் நாட்டில் உலவ முடியாது! இப்போதே போகும் இடமெல்லாம் கறுப்புக்கொடி! பார்க்கும் மக்களிடமெல்லாம் எங்களைப் பற்றிய ஒழிக முழக்கம்! இனி, இதும் செய்து விட்டால்......அவ்வளவுதான், நாங்கள் வடநாட்டிற்கே குடிவந்துவிட வேண்டியதுதான்! வடநாடு குட்டக் குட்ட குனிந்து கொடுப்பவர்கள் நாங்கள் என்று அந்த திராவிடஸ்தான்காரர்கள் தூற்றுவதை இப்பொழுதே கேட்கச் சகிக்கவில்லை! இனி ஜமீன் மசோதாவையும் வாபீஸ் வாங்கி விட்டால்......நாடு தாங்காது!"

"என்ன சொன்னீர்கள்! நாடு தாங்காதா? எங்கள் கட்டளைக்கு உங்கள் நாடு தாங்காதா? நாங்கள் இடும் சாசனத்துக்கு உங்கள் நாடு தாங்காதா? ஏதேது, நீங்களும் திராவிடஸ்தான் கேட்பீர்கள் போல் இருக்கிறதே இரண்டொரு நாள் போனால்!"

"கேட்டால் அதில் ஆச்சரியம் இருக்க முடியாது! இப்படி, எத்தனை நாட்களுக்குத்தான் உதைக்கும் காலுக்கு முத்தமிட்டுக் கொண்டிருக்க முடியும்? நாங்கள் மட்டு மென்ன திராவிடர்கள் அல்லவா? கதர்சட்டை அணிந்திருப்பதாலேயே எங்கட்கு இன உணர்ச்சி இருக்காது என்று அர்த்தமா?........

* * *

நமது முதலமைச்சர் ஓமந்தூராருக்கும் வடநாட்டில் உள்ள காங்கிரஸ் மேலிடத்திற்கும் இது போன்றதோர் உரையாடல் நடந்திருந்தால் நாம் வியப்புற மாட்டோம்—நாட்டு நடப்பும் செப்டம்பர் 21 ல் ஓமந்தூரார் சென்னை இதழாசிரியர்கட்குத் தந்துள்ள அறிக்கையும் இத்தகைய உரையாடல் ஒன்று நடந்தே இருக்கும் என்பதை நமக்கு நன்கெடுத்துக் காட்டுகின்றன.

சென்னை மாகாண காங்கிரஸ் சர்க்கார் இனும்களையும் ஜமீன்களையும் ஒழித்துக்கட்ட ஒரு மசோதா கொண்டுவந்தது. இனும்கள் புரோகிதத்துவத்தின் வளர்ப்புச்சாலை! ஜமீன்கள் முதலாளித்துவத்தின் நடனமேடை! இரண்டும் ஒழியத்தான் வேண்டும் என்று நாடு முழங்கிற்று. காங்கிரஸ் சர்க்காரின் இத்திட்டத்திற்கு கட்சி வேற்றுமையையும் கருதாது நாட்டிலே உள்ள சகல கட்சிகளும்—முக்கியமாக திராவிடர் கழகமும்—தங்கள் முழு ஆதரவையும் தந்தன. ஆனால் வைத்தியநாதய்யர்களும் வரதாச்சாரிகளும் மேலிடத்திற்குக் 'காவடி' எடுத்தனர், டில்லி தேவதைக்குத் 'தூபம்' போட்டனர், சாஸ்திரிகளும் சர்

(9-ம் பக்கம் பார்க்க)


## திராவிடநாடு படங்கள்

பளப்பளப்பான ஆர்ட் கார்டில் மூவர்ணத்தில் கண்கவர் கார்டூன் படத்துடன் அச்சடிக்கப்பட்டது. சுரண்டல், சுயநலம், ஏகாதிபத்யம் ஆகிய மூன்றையும் பெரியார் போ! வெளியே என்று விரட்டும் கருத்தடங்கியது. திராவிடர்கள் இல்லங்களில் அவசியம் இருக்கவேண்டியவை.

**விலை மிக மலிவு** **விலை அணா ஆறு.**

25க்கு குறைந்த வெளியூர் ஆர்டர்கள் கவனிக்க இயலாது. கழிவு 20% தபால் செலவு கிடையாது. வேண்டுவோர் முன்பணத்துடன் எழுதுக.

**இன்பக்கனவு**

ஜி. இராதாமணியின் சிறுகதை தொகுப்பு

**விலை அணா 12.** **கழிவு 25%**

**புத்துலகப் பண்ணை**

சென்னை 7.


**மாதர் முன்னேற்றத்தால் மகிழ்வது மாண்பா?**

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

உன் நாட்டுக் கற்புக்கும் இப்பொழுதாவது வேற்றுமை தெரிகிறதா? யார் யாரோ இங்கு வந்து தமிழர்க்குக் கற்பைக் கற்றுக் கொடுத்தார்கள் என்று கூறும் அறிவுப் பெருந் தகையாருக்கு ஆணித்தரமான விடை தரத்தான் இந்த மாதவியின் சிலை இங்கு நிறுத்தப்பட்டிருக்கிறது. பெருமதியினரே! தமிழ்நாட்டுப் பரத்தையர்க்கு இத்தகைய கற்பு என்றால் எங்கள் நாட்டுக் கற்பின் பெருமையைக் கூறவும் வேண்டுமா? என்று சொல்லாமல் சொல்லிக் கொண்டு நிற்கும் தேவி இவள். இவளுக்கு என் மனமார்ந்த நன்றி!''

‘சரி! இந்தப் பக்கம் வா! இதோ இவன்தான் தமிழரை இழித்துரைத்த தருக்கினரைப் போரில் வென்று அவர் தலையில் சிலையேற்றிய சேரன் செங்குட்டுவன்.''

‘இவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். குடி பழி தூற்றும் கொடுங்கோன்மைக்கு அஞ்சி செங்கோன்மை வழுவாது அரசோச்சியவன். மாங்குடி மருதன் தலைவனாகப் பலர் புகழ் நிலவரை யுடையவன்.'

‘இவள் புலமை நிறைந்த பெண். அரசர் போற்ற வாழ்ந்த அரிவை. பெயர் காக்கை பாடினியார், நச்செள்ளையார்'

‘இவள் நமது கிழவி! அரசராயினும் அஞ்சாது பேசும் திறமுடையவள். வேறு யாருமில்லை ஔவைதான்,'

‘இவள் வீரப் பெண்மணி. தன் மகன் போரில் புறங்காட்டி ஓடினான் என்று கேட்டுச் சினங்கொண்டு ‘அப் பேடிக்குப் பால் தந்த கொங்கையை அறுத்தெறிவேன்' என்று வாளுடன் போர்க்களம் ஓடினாள். வாளால் பிணங்களைப் புரட்டினாள். தன் மகன் பிணத்தையும் கண்டாள். அவன் மார்பில் வேல்பட்டு ஊடுருவிச் சென்றிருப்பதைப் பார்த்தாள், கண்கள் நீரைச் சிந்தின. வருத்தத்தால் அல்ல. உவகை நீர் அது. வீரச் சிரிப்புடன் வீட்டிற்குத் திரும்பினாள்.'

‘அவளைப்போலவே இவளும் வீரக்குடியில் பிறந்தவள்தான். இவளின் துணைவன் பகைவரொடு பொருது உயிர் துறந்தான். உடன் பிறந்தவனும் எதிரியின் வாளுக்கு இரையாகினான். இதை அறிந்தாள் இவள். தன் பிள்ளையை அழைத்தாள். தலைக்கு எண்ணெய் தடவி வாரிவிட்டாள். வீட்டிலிருந்து ஒரு வேலை எடுத்து வந்து அவன் கையில் கொடுத்துப் போருக்குப் போய்வா என்று அனுப்பினாள். தன் நாடு மாற்றான் கையில் சிக்கிவிடக் கூடாது என்ற எண்ணந்தான் அவளை அவ்வாறு செய்யத் தூண்டியது!''

“இவர் யார் தாத்தா? வீரம் பொருந்திய இளைஞராயிருக்கிறாரே! அபிமன்யுவோ?''

“இல்லையப்பா இல்லை! வேற்றவனைத் தெரிந்த அளவு உன்னவனைத் தெரியவில்லையே. அபிமன்யுவுக்கு இந்த நாட்டிலே சிலை எழுப்புவது அறியாமையல்லவா!''

“அப்படியானால் வடநாட்டு சேட்டுகளுக்கும் பாபுக்களுக்கும் சிலை இங்கிருக்கிறதே அது அறியாமையா?''

“அறியாமை மட்டுமல்ல அது அடிமைத்தனமும் ஆகும். வீரசிதம்பரம், பன்னீர்ச் செல்வம், தாலமுத்துநடராசன், திருப்பூர்க் குமரன் இவர்களை மறப்பதற்குக் காரணமாயுள்ள அறியாமையும் அடிமைப் புத்தியும் போகவேண்டுமென்பதற்குத்தானே உன்னை இந்தக் கோட்டைக்கு அழைத்து வந்தேன். இந்தக் கோட்டையைப் பார்த்தபிறகாவது உன் நாட்டின் இன்றைய நிலையை நீ உணரமுடியுமல்லவா? உன்னைப்போல ஒவ்வொரு இளைஞனும் உணர்ந்தால்... நாடு நாடாகும். தமிழகம் தனி உரிமை பெறும். தமிழனே அதை ஆள்வான்.''

“தாத்தா! இப்பொழுதுதான் என்னை இங்கு அழைத்து வந்ததன் நோக்கம் தெரிகிறது. எனக்கு நாட்டுணர்ச்சியை உண்டாக்கினமைக்கு என் நன்றி! சரி! அந்த இளைஞர் யார் என்பதைக் கூறுங்கள்!''

“அவன்தான் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி என்பான். செய்யுளியற்றும் ஆற்றல் உடையவன். ஒரு பொழுதும் தனித்து உண்ணமாட்டான். எவரிடத்தும் வெறுப்புக் கொள்ளமாட்டான். பழிக்கு அஞ்சுவான். புகழோ எனின் உயிரையும் கொடுப்பான். சோர்வில்லாதவன். வீரமுடையவன். இளமைப் பருவத்திலேயே இத்தகைய பெருங்குணங்களையுடையவன். ஆகலால்தான் இளம் பெருவழுதி எனப் பெயர் பெற்றான்''

“அப்படியானால் ‘கடலுள் மாய்ந்த' என்று எதற்காக அடைமொழி வந்தது?''

“அதை எண்ணும் பொழுதுதான் என் மனம் துடிக்கின்றது—கொதிக்கின்றது. அந்த வீரன் இருந்தால் இந்த நாட்டில் இன்னும் எத்தனையோ அரும்பெரும் செயல்களை எல்லாம் செய்திருப்பான். தமிழகத்தின் வீரத்தைக் காட்டத்தான் வெளிநாடு சென்றான், வெற்றி கண்டு மீளுகையில் அவன் நடுக்கடலுள் மாய்ந்தான். இதுபோல நாட்டுக்காக உழைத்த—தமிழ் நாட்டின் உயர்வுக்காக வெளிநாடு சென்ற எத்தனையோ செல்வங்களை விழுங்கியிருக்கிறது இந்தப் பாழுங்கடல்.''

“தாத்தா! அப்படியானால் இவர் வரலாற்றை முழுதும் சொல்லுங்கள்!''

“சொல்லுகிறேன். அந்தத் தீரன் வரலாற்றைச் சொல்லுகிறேன் கேள்! நன்றாகக் கேள்!''

பாண்டிநாட்டின் இளவரசன் இளம் பெரு வழுதி, நீணில வழுதியின் மகன். தமிழகம் முழுவதும் நீணில வழுதியின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. அவன் ஆணை இமய வரையோடு நின்று விடவில்லை. கடல் கடந்தும் சென்றது. இலங்கை, ஈழம், கடாரம், சீனம் முதலிய நாடுகளுக்குச் சென்றது. இதற்குக் காரணம் இளவரசன் தான். அத்தகைய வீரமகனைப் பெற்றெடுத்த நீணில வழுதி பெருமிதங் கொண்டிருந்தான். அப்பெருமிதத்தால் தனது முதுமையையும் மறந்து அரசை அவனே

(-10ம் பக்கப் பார்க்க)

மேதினி துயர்பட விரும்புதல் இதமா?

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ாக்களும் மீண்டும் தலைதூக்காத வரத்தை அளித்தது டில்லி, இனம்களை ஒழிக்காதே—கொடு அவற்றிற்குப் பாதுகாப்பு என்று ஆணையிட்டது மந்தூராருக்கு! அவரும் விட்டுக் கொடுத்தார்.

ஆம்! விட்டுக் கொடுத்தார்! எவ்வளவு முடியுமோ அவ்வளவு விட்டுக்கொடுத்தார்! விட்டுக் கொடுப்பது என்பதன் எல்லைக்கோடு எதுவரை ண்டோ அதுவரை விட்டுக் கொடுத்தார்! மேலும் மேலும் விட்டுக் கொடுத்தார்! மீண்டும் மீண்டும் விட்டுக்கொடுத்தார்! பார்ப்பனீயத்திற்கு உரம் ஊட்டும் இனம்கள் இருக்கத்தான் வேண்டும் என்றது மேலிடம்! சரி என்றார் ஓமந்தூரார்! ஜமீன்தார்கட்கு கஷ்ட ஈடு 10 கோடி தரவேண்டும் என்றது மேலிடம்! அதற்கும் சரி என்றார் ஓமந்தூரார். 10 கோடி போதாது 12 கோடி தரவேண்டும் என்றது மேல் இடம்! மறுபடியும் ஒப்புதல் கொடுத்தார் நம் முதலமைச்சர்! கூட ஈட்டுத் தொகையை பெருத்த அளவுக்கு உடனே கொடுத்துவிட வேண்டும் என்றது மேல் இடம்! அதற்கும் சரி என்றார் ஓமந்தூரார்! சுருங்கச் சொன்னால் 'மேல் இடம்' பிறப்பித்த அத்தனை கட்டளைகளுக்கும் ஒப்புக்கொண்டார் அவர்! ஆனால் கடைசியாக அந்தப் பொல்லாத 'மேலிடம்' ஜமீன் ஒழிப்பு மசோதாவையே நிறுத்தி விடச் சொல்லிற்று, ஜமீன்களை ஒழிப்பதுவே கூடாது என்று கூறத் தொடங்கிற்று, அப்போது தான் ஓமந்தூரார் நிமிர்ந்து நின்றார், தென்னாட்டு சர்க்காரின் உரிமைகளை, வடநாடு, அளவுக்கு மீறிப் பறிக்கிறது என்பதைக் கண்டார், கொதித்தது அவர் உள்ளம் இந்தக் கொடுமை கண்டு, உடனே கூறினார் "முடியாது உங்கள் கட்டளைக்கு இணங்க" என்று!

சென்னையில் 21-9-48 அன்று ஓமந்தூரார் இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிறார்—செய்தி அன்றைய 'மெயில்' பத்திரிகையிலும் பிற ஏடுகளிலும் வெளிவந்துள்ளது—ஐயுறவு கொள்பவர்கள் நேரில் காணலாம்.

தொட்டதற்செல்லாம் வடநாடு தென்னாட்டுக்குக் கட்டளை பிறப்பிக்கும் நிலையிலே இருக்கிறது, வடநாடு தென்னாட்டை ஆள்கிறது, வாணிபமா அரசியலா பொருளாதாரமா ஒவ்வொன்றிலும் வடநாட்டவர் கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்கவேண்டிய பரிதாபகரமான நிலையில் தென்னாடு இருக்கிறது, இந்த இழி நிலை போகவேண்டும், தென்னாடு வடநாட்டுக்குத் தலை குனியத் தேவையில்லாத சுதந்தர ஆட்சி பெறவேண்டும், தனித் திராவிடம் அமையவேண்டும் என்று நாம் கூறுகிறோம்! இதோ ஓமந்தூராரும் அதையே தான் கூறி இருக்கிறார்—கொஞ்சம் மாறுதலான மொழி நடையில்! இடபேதம் அந்த மாறுதலைத் தந்திருக்கிறது, நாம் காங்கிரசுக்கு வெளியே இருக்கிறோம், அவர் அந்தக் கூடாரத்துக்கு உள்ளே இருக்கிறார், எனவேதான அவர் மொழிக்கும் நம் மொழிக்கும் சற்றே வேற்றுமை இருக்கிறது, ஆனால் அடிப்படை ஒன்றுதான்—வடநாட்டு ஆதிக்கத்தை எதிர்ப்பது என்ற அடிப்படை!

ஓமந்தூராரின் "திராவிடஸ்தான்" இப்போதுதான் 'உருவாகிறது—அது தெளிவற்ற நிலையிலே இருக்கிறது—ஆகவேதான் ஓரளவு குழப்ப உருவம் காட்டுகிறது அவருடைய திராவிடஸ்தான்—ஆனால் நாளடைவில் அவருடைய திராவிடஸ்தான் நம்முடைய திராவிடஸ்தானாக மாறியே தீரும், இதில் நமக்குத் துளியும் ஐயமில்லை.

ஓமந்தூரார் ஜமீன் ஒழிப்புப் பிரச்சினையிலே மட்டும்தான் வட நாட்டு காங்கிரஸ் மேலிடத்தைத் தைரியமாக எதிர்த்து நிற்கிறார் என்பதில்லை, மதுவிலக்குப் பிரச்சினையிலும் மிக உரமாக எதிர்த்து நிற்கிறார். மதுவிலக்கு அக்டோபர் 1 முதல் சென்னை மாகாணம் முழுவதுக்கும் அமுலுக்கு வருகிறது. இது கூடாது என்று தாக்கீது பிறப்பித்தது வடநாட்டு மேலிடம். மதுவிலக்கை ஒத்திப் போடு என்று ஆணை தந்தது டில்லி! அதற்கும் ஓமந்தூரார் தந்தது ஒரு 'மறுப்பு'. ஆம்! மதுவிலக்கு ஜாம் ஜாமென அமுலுக்கு வருகிறது அக்டோபர் முதல் தேதி முதல், மாகாணம் முழுவதும்—மேலிடத்தின் ஆணையைச் சட்டை செய்யாமல்!

இன்றைய முதலமைச்சர் ஓமந்தூராருக்கு மட்டும்தான் இந்த வடநாட்டு எதிர்ப்புணர்ச்சி தோன்றியிருக்கிறது என்றில்லை, முன்னாள் முதலமைச்சர் பிரகாசம்காருவுக்குக்கூட இந்த உணர்ச்சி மிக அழுத்தமாக ஏற்பட்டிருக்கிறது.

செப்டம்பர் 12ம் தேதி அவர் சட்டசபையில் பேசி இருக்கிறார் மேலிடத்தைப் பலமாகத் தாக்கி! படியுங்கள் அவர் வாசகத்தை :—

(12-ம் பக்கம் பார்க்க)

## விதவைக்கு மறு மணம் உதவுதல் இதமா?

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தி வந்தான். இருப்பினும் அரசியின் வேண்டுகோள் அரசன் மனதை மாற்றியது.

"இளம் பெரு வழுதிக்கு முடிசூட்டு விழா என்று எங்கும் அறிவிக்கப்பட்டது. ஓலைகள் வெளி நாடுகளுக்கு அனுப்பப்பட்டன. நாட்கள் விரைந்து ஓடின. இன்னும் சில நாட்களே உள்ளன விழாவிற்கு.

அரசன் பெருமிதத்தோடு அரியணையில் வீற்றிருந்தான். அருகில் இளவரசன். அவையில் அமைதியும் மகிழ்வும் குடிகொண்டிருந்தது. தூதுவன் ஒருவன் வந்து நின்றான்.

"அரசே! கடாரத்தரசர் சீயன் திறை கொடுக்க மறுத்துவிட்டார். 'வலிமையிருப்பின் போருக்கு வரட்டும்' என்று கூறிவிட்டார். மேலும் இங்கு படை எடுத்து வரவும் ஏற்பாடுகள் மறைவாக நடந்து வருகிறது" என்று தூதுவன் கூறினான்.

அரசன் முகம் சிவந்தது. 'வலிமை யிருப்பின் போருக்கு வரட்டும்'......ம்ம்...சரி. போருக்குப் புறப்பட ஆயத்தமாகட்டும்! தமிழகத்தின் வலிமையை அறியச் செய்வோம். அமைச்சரே! நீர் இங்கிருந்து முடிசூட்டு விழாவை நடத்தி வையுங்கள்! நான் நாளையே போருக்குப் புறப்படுகிறேன்."

"அப்பா! நானே படை நடத்திச் செல்கிறேன். எனக்கு ஆணையிடுங்கள். அவன் தருக்கைஅடக்கி மீள்கிறேன். உங்கள் முதுமையில் நீங்கள் செல்வது—அதை நான் பார்த்துக் கொண்டிருப்பதா? வாகை சூடிவருகிறேன். விடை தாருங்கள்!" என்றான் இளவரசன்.

"இளம்வழுதி! நீ செல்ல வேண்டாம். உனக்கு முடிசூட்டு விழா என்பதை மறந்து விட்டாயா? விழாவிற்கு இன்னும் சிலநாட்களே இருக்கின்றன. அதனால் நானே செல்கிறேன். நீ ஆட்சியைக் கவனித்துக்கொள்." என்றார் அரசர்.

"அப்பா! நான் விழாவை மறக்கவில்லை. உங்கள் கட்டளையை மறுக்கவுமில்லை. நம் நாட்டின் வீரத்தை அறியாது கூறிய எதிரியின் ஆணவத்தை அடக்கி அந்த வெற்றியின் அறிகுறியாக நான் முடிசூடினால் அது உங்களுக்குத் தானே பெருமை. விழாவை விட நாட்டின்மானம் பெரிதல்லவா! ஆதலால் விழாவைப் பின்னர் பார்த்துக் கொள்வோம்."

"ஆம்! அதுவும்.........சரிதான். அப்படியானால் நாளையே புறப்படு!"

போர் முரசு முழங்கிற்று. படை திரண்டு சென்றது. கடலைக் கடந்து கடாரத்தை அடைந்தது. சீயன் பெரும் படையுடன் எதிர்த்தான்.

சீயனும் எளிமையானவனல்ல. சிறந்த வீரன். துணைவேந்தரும் பெருவலியுடையார். பிறர்க்கு அடிமையாக வாழ்தல் கூடாது என்ற மானவுணர்ச்சி மீக்கூர்ந்து நிற்பதால் சீயன்படை உண்மையில் சிங்கமெனச் சீறிப்போர்செய்தது. பாண்டி நாட்டு மறப்படையும் பாய்ந்தது. குருதி வெள்ளம் பிணக்குவியலை அடித்துக்கொண்டு சென்றது. போர் ஐந்து நாட்கள் தொடர்ந்தது.

சீயன்படை மலைத்தது. அவனும் கூட மலைத்தான் மக்கள் மாள்வதைக் கண்டு. ஒரு வகையில் உறுதிப் படுத்திக்கொண்டு "படைவீரர்களே! வெற்றியும் தோல்வியும் உங்கள் வாள் முனையில்தானிருக்கிறது. ஏன் இந்தக்கடாரமே நீங்கள் பிறந்த பொன்னாடே உங்கள் கையில்தான். நாட்டைக் காக்க இரத்தம் சிந்தித்தான் ஆகவேண்டும். விடுதலை பெற்ற எந்த நாட்டையும் பாருங்கள்! உயிரையும் இரத்தத்தையும் சிந்தித்தானிருக்கிறது. சிந்தினால்தான் வெற்றியும் விடுதலையும் பெற முடியும் ஒன்று நாடு விடுதலை பெறவேண்டும். அல்லது நமது உயிர் விடுதலை பெறவேண்டும். அது கண்டு மலைக்கவேண்டாம். வீரர்களே வாளை ஏந்துங்கள்! பகை வெள்ளத்தை நீந்துங்கள்! என்று வீர மூட்டினான்.

ஆறும் நாள் போர் மூண்டது. அன்று மிகக் கடுமையாக எதிர்த்தது கடாரப்படை. கடும்போர் சீயன் வாளும் வழுதியின் வாளும் சந்தித்தன. அவற்றின் நுனியில்
தான் அவர்களின் உயிர் ஊசலா
டிக் கொண்டிருந்தது. அவர்களின்
வெற்றி மதில் மேற்பூனை என
எண்ணுமாறிருந்தது. வழுதியின்
வாள் போரின் நிலையைக்காணக்
கூசி சீயன் மார்பில் மறைந்தது.
சீயன் வாள் வழுதியின் இடது
தோளில் பாய்ந்தது. வழுதி ஓய்
தான். சீயன் சாய்ந்தான். கடா
ரப்படை கலைந்து ஓடியது.

தந்தை மாண்டதால் துக்கமும்
நாடு தோற்றதால் வெட்கமும்
மிகுந்ததால் எழிலி உள்ளம் எரி
மலையாயிற்று. உணர்ச்சி அவள்
நெஞ்சில் தோன்றிக் குருதியொடு
கலந்தது. 'பழிக்குப் பழி' என்று
அவள் இதயத்துடிப்பு ஒவ்வொன்
றும் கூறியது.

"எழிலி யார் தாத்தா?"

"எழிலி சீயனின்மகள். போர்க்
கோலங் கொண்டாள். படையைத்
திரட்டினாள். ஏழாம் நாள்
போரைத் தொடங்கிவிட்டாள்.

"களத்தில் எழிலிவாள் வழு
யின்வாளைத் தாக்கியது ஒன்றை
யொன்று உராயும் போது உண்ட
கும் ஒலியைவிட அவர்கள் விடு
மூச்சொலி பெரிதாக இருந்தது
நெடுநேரம் அவர்கள் நிற்கவில்லை
வாளும் கையும் வேலை செய்து
கொண்டிருக்கும்போதே அவ
கண்ணும் மனமும் வேலை செ
தன. அவனுடைய அழகிலும் வீரத்
லும் அவள்சொக்குவாள். வா
மறுபடி உணர்ச்சியைத் திருப்பு
இவ்வாறு மாறிமாறி நடந்துகொண்
டிருந்தது. கடைசியில் அவ
மயங்கி விழுந்தாள். அப்பொழு
தான் அவள் ஒரு பெண் என்பதை
இளம் பெருவழுதி அறிந்தான்
அவள் வழுதியின் பாசறைக்கு
கொண்டு வரப்பட்டாள். தலை
யின்மையால் கடாரப் படை கலை
தது.

* * *

'ஒரு பெண்ணா இவ்வளவு வீர
தோடு என்னுடன் போர்புரிந்தாள்
வீரமங்கை! இவள் யாராயிருக்
லாம்? ஒரு வேளை சீயன் மகள
யிருக்கலாமோ? வீரத்தைப் போ
வே அழகும் நிரம்பியிருக்கிறத

## கோதையர் காதல்மணம் கொள்வது சீரோ?

வள் முகம் என் மதியைக் கலக்கு றதே! என்மனம் ஏன் அவள் ால் இவ்வளவு இரக்கமும் ஈடு ாடும் கொள்கிறது, ஏதோ ஒரு த உணர்ச்சி தோன்றித் தோன் த் துன்புறுத்துகிறதே! காதல் ன்பார்களே அதுதானே!......... ான் இங்கு வந்தது கடமைக்கா? ாதலுக்கா?......கடமைக்கு வந்தா லன்ன காதல் கொள்ளக் டாதா?...ஆம்! காதல் கொண் ால் கடமையில் தவறுவேன். வள் என் எதிரி! காதலுக்காகக் டமை தவறுவதா? மேலும் கைதி ான பெண்ணைக் கள்ளத்தனமா ப் பெற்றான் என்று உலகம் தூற் ம்.'' என்று எண்ணமிட்டுக் காண்டே பாடி வீட்டில் அங்கு ங்கும் நடந்து கொண்டிருந்தான் ழுதி.

மயக்கம் தெளிந்து, எழுவதற்கு யன்றாள் எழிலி.

'பரவாயில்லை! படுத்துக் கொள் ங்கள்!'

'நான் எங்கிருக்கிறேன்?'

'பாண்டியன் பாசறையில்...'

'ஆ! கைதியாகினேனா?'

'இல்லை! காப்பாற்றப் பட்டீர் ள்'..............

எழிலியின் கண்முன் முதல்நாள் கழ்ச்சி தெரிந்தது. வழுதி போர்க் ளத்தில் வாள் வீசியது தோன்றி து. அப்படியே எதிரில் நிற்கும் வன் முகத்தைப் பார்த்தாள். வள் முகம் மலர்ந்தது. அயர்ச்சி ங்கிக் காதல் உணர்ச்சி ஓடியது வள் குருதியில். தன்னையும் பாரையும் மறந்தாள். பேச யன்றாள்.

'உங்கள் வாள் வீச்சை விடக் ண் வீச்சு வியக்கத் தகுந்த முறை ல் இருக்கிறதே!'

'இல்லை அம்மணி! பிழையாகக் ருதிவிட்டீர்கள்!'

'ஆம்! பிழையாகத்தான் கருதி ட்டேன் பழிக்குப் பழிவாங்க வண்டுமென்று! அம்மணி என்று சால்லாதீர்கள்! என் பெயரைச் சால்லி அழையுங்களேன்!'

'பெயர்?...நீங்கள் யார்?'

'எழிலி! உங்கள் எதிரியின் ள்!'

எழிலி!.........பொருத்தமான பெயர்தான்.'

'பொருத்தமில்லாவிட்டால் உங் களை இப்படித் தனியாகக் காணும் பேறு கிடைத்திருக்குமா?

'உங்கள் போக்கு.........!'

'ஏன்! விந்தையாக இருக் கிறதா?'

'இல்லை! ஐயமாக இருக்கிறது.'

'ஐயமே வேண்டாம், நான் உங் கள் அடிமை. என்னையும் நாட்டை யும் ஏற்றுக்கொள்ளுங்கள்! என் தந்தை எனக்கு நல்லதே செய்தார். அவர் போருக்கு அழைத்திராவிட் டால் எனக்கேற்றவரை நான் பெற் றிருக்க முடியுமா?'

'எழிலி! ஏன் இப்படியெல்லாம் கோட்டை கட்டுகிறாய்? உன் கருத்து............,

'பலிக்காவிட்டால், இன்னும் வாள் என் கையை விட்டுப் போய் விட வில்லையே. அதனிடம் என் உயிரை ஒப்படைக்கிறேன்.'

'எழிலி! உன்னை நம்பிய உன் நாட்டு மக்களுக்கு விளைக்கும் பெரும் 'துரோகம்' அல்லவா இது'

'இதுவா 'துரோகம்,' என் கருத் துக்கேற்ற மணாளனைத் தேர்ந் தெடுத்துக் கொள்வதா துரோகம். அப்படியானால் சரி! நானைப் போரு க்குச் சித்தமாயிருங்கள். போர்க் களத்தே உங்கள் கையாலேயே மடிகிறேன். நாட்டுக்காக உயிர் துறந்தேன் என்ற புகழும் என் கருத்து நிறைவேறாவிடினும் உங்கள் கையாலேயே மடிந்தேன் என்ற திருப்தியும் என்னை அடையட்டும்' என்று அவள் கூறும்போதே நீரைச் சிந்தின கண்கள்.

மன்னன் மனம் இளகியது. 'வீரப்பெண்மணி! உன் தந்தையின் வாள் தந்த பரிசில் என் இடது தோளில் உள்ளது. உன் வாளோ வலது தோளுக்குப்பரிசு அளித்தது. இந்தப் போர் உன்னைப் பரிசிலாக என் உயிருக்கு அளித்தது......'

'இல்லையில்லை, என் தந்தை உயி ரல்லவா உங்களை எனக்குப் பரிசி லாக அளித்திருக்கிறது! உயிர்த் துணைவரே! அருகில் வாருங்கள்!'

'எழிலி!............

* * *

'விரைவில் திரும்பி வருவீர் களா?'

'கண்ணே! முடி சூட்டியதும் உடனே வருகிறேன். வந்து உன்னை மணந்து செல்கிறேன்.'

'உங்கள் முடிசூட்டு விழாவைக் காணும் பேறு உங்கள் மனைவிக் கில்லை!'

'வருந்தாதே எழிலி! வாகை சூடி வருகிறேன் என்று சொல்லி வந்த நான் மணமாலை சூடிச் செல் வது அவ்வளவு அழகல்ல. விரை வில் வந்து உன்னைப்பட்டத்தரசி யாக்கி அழைத்துச் செல்லுகிறேன். அதுவரை நாட்டை நன்கு நடத் திக்கொண்டிரு! நான் சென்று வரட்டுமா?'

அவள் கண் உகுத்த துளிகள் விடை தந்தன.

மரக்கலங்கள் மாறன் நாட்டை நோக்கிப் புறப்பட்டன, வெகுவேக மாக—வெற்றிக் களிப்போடு. கடா ரப்படையைக் கடந்தது போலவே கடலின் அலைப்படையையும் கடந்து நடுக்கடலில் சென்று கொண்டிருந்தன.

சீயன் வந்து எதிர்த்ததை விடப் பன்மடங்கு வன்மையோடு பெரும் புயல் மரக்கலங்களை எதிர்த்தது. படை இங்கு என்ன செய்ய முடி யும்? திறலும் வீரமும் கலந்த உள்ளத்தோடு கலங்களைச் செலுத் திக்கொண்டிருந்தனர்.

எவ்வளவு நேரந்தான் சமாளிக்க முடியும்? கைகள் ஓய்ந்தன. புயல் இன்னும் சீறிச் சீறி வீசி யது. அந்தோ! கலங்கள் கலங் கின. சில கவிழ்ந்தன. சில சித றின. திசையறியாது திண்டாடிச் சென்றன சில

காற்றும் ஒருவாறு ஓய்ந்தது.

* * *

வெற்றியுடன் திரும்பும் வீரர்க ளுக்கு அளவு கடந்த வரவேற்பு. நாளை, புது மன்னனை அடையப் போகும் பூரிப்பால் மக்கள் ஆரவா ரம் செய்தனர்! அப்பப்பா எவ்வ ளவு மகிழ்ச்சிப் பெருக்கு! அரசன் ஆனந்தக் கடலுள் மூழ்கி மூழ்கி எழுந்தான்.

'எங்கே என் மானங்காத்த இளம் வழுதி?' என்றான் நீணில வழுதி இறுமாந்து நின்று.

விடையில்லை.

(12-ம் பக்கம் பார்க்க)

குழந்தைக்கு மணஞ்செய்து கொல்வது சீரோ?

(9-ம் பக்கம் தொடர்ச்சி)

"நான் கொஞ்சகாலமாக இந்த ஜமீன் ஒழிப்பு மசோதாவைப் பற்றிப் பேசுவதையே விட்டுவிட்டேன்! ஏனெனில் இந்த சர்க்காரை நியாயமான வழியில் திருப்ப முடியும் என்ற நம்பிக்கையே என்னைவிட்டு அகன்றுவிட்டது. இந்த அமைச்சர்கள்தான் என்ன செய்வார்கள் பாவம்! எதைக் கேட்டாலும் 'மேல் இடத்து உத்தரவு' என்று சொல்கிறார்கள்! ஆகவே எனக்கு அவர்கள்மீது பரிதாபம்தான் பிறக்கிறது. நம் சட்டசபையில் ஜமீன் ஒழிப்பு மசோதாவை நாமே திறமையாக நிறைவேற்றிக் கொள்ள முடியாதா? நம் விருப்பத்திற்கு மாறாக எதற்காக இந்த மேலிடம் அடிக்கடி 'உத்தரவு'களைப் போடவேண்டும்? இந்த மேலிடத்துக் குறுக்கீடுகளை எதிர்த்து நமது மாகாண மந்திரிகள் தைரியமாக மந்திரி பதவிகளை உதறி எறிந்துவிட்டு வெளியேறி இருக்கவேண்டும். சரி, ஏதோ அப்படிச் செய்யாமல், தொடர்ந்து மந்திரிகளாகவே இருக்க வேண்டும் என்று முடிவு செய்துவிட்டார்களே, அப்படி முடிவு செய்தபிறகு, குறைகள் அதிகம் இல்லாத முறையிலாவது இந்த மசோதாவைத் திருத்தி அமைத்திருக்க வேண்டும். என்ன செய்வது? அவர்களைக் கேட்டால் மேல் இடத்து 'ஆலோசனை'களை ஏற்றுக் கொண்டதால்தான் இப்படி ஆயிற்று என்று கூறுவார்கள். உண்மையிலேயே இந்த "மேலிடத்து" ஆலோசனைகளால்
தான் இந்த இவ்வளவு குழப்பம் ஏற்பட்டிரு
கிறது மாகாண சர்க்கார் தாமாகவே தமக்கு
தேவையான சட்டங்களை நிறைவேற்றிக்கொள்
வேண்டுமே தவிர மேலிடம் இதில் எல்லா
நுழையக்கூடாது என்பது என் அழுத்தந் திருத்
மான கருத்து. **எவ்வளவுக் கெவ்வளவு மேலிட**
**நம் விஷயங்களில் குறுக்கிடாமல் இருக்கிறதோ அ**
**வளவுக்கவ்வளவு நம்மை இந்த சட்டசபைக்குத் தே**
**தெடுத்தனுப்பிய நம் மக்களுக்கு நன்மை ஏற்படு**
மக்கள் நம்மைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்க
நாம் ஆட்சி முறையைத் தொடர்ந்து நடத்
வேண்டும். மக்களுக்கும் நமக்குமிடையே இ
மேலிடம் எதற்காகக் குறுக்கே வரவேண்டும்
ஜமீன் இருப்பதோ போவதோ, நஷ்ட ஈடு கொ
சமோ அதிகமோ, இதைப் பற்றியெல்லாம் ம
ளின் பிரதிநிதிகள் என்ற முறையில் நாம்தா
முடிவு செய்யவேண்டுமே தவிர கட்டளை அ
—ஆலோசனை கூறுகிற முறையில்கூட, இ
மேலிடம் தலையிடக்கூடாது."

பிரகாசம்காரு இதைப் பேசியிருக்கிறா
எங்கேயோ மூலைமுடுக்கில் அல்ல—சட்டச
யில்! வடநாட்டு எதிர்ப்புணர்ச்சி—திராவிட
தான் கிளர்ச்சியின் அடிப்படை வேகம் எ
கெங்கே பரவியிருக்கிறது பாருங்கள்! திராவிட
தான் ஒரு பகற்கனவு என்று பேசுகிறார்க
சில கோமாளிகள், அவர்களுக்கு இந்த ஓமந்
—பிரகாசம் செய்திகளை எடுத்துக் கூறுங்கள்.

---

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

எவனோ ஒருவன் ஒரு காலத்தில் கைக்கோடுகளைப் பார்த்து குறி சொல்லியிருப்பான். இதை உண்மையென நம்பி பழக்க வாசனையால் கைபார்த்துக் குறிசொல்லும் பழக்கம் வந்திருக்கவேண்டும். இவ்விதமாகத்தான் நமது கையைப் பார்த்துக் குறி சொல்லும் பழக்கம் உண்டாகி இருத்தல்வேண்டும். எந்த மூடனும் இந்தப் பழக்கத்தைக் கையாளலாம். ஆனால் இந்த மூடநம்பிக்கையில் விசுவாசமுள்ளவர்களைப் பற்றித்தான் நாம் வருந்துகிறோம்.

---

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

'எங்கே? ஏன் வாய்வாளாமை?' என்று பதட்டத்துடன் கேட்டான்.

'கடவுள் மாய்ந்தார்' என்று அமைதியைப் பிளந்துகொண்டு வந்தது ஒரு பயங்கரக் குரல்.'

'ஆ'

'யாரப்பா இது! ஆ ஓ என்று சத்தம் போட்டுக்கொண்டிருப்பது, நேரமாகுது வெளியே போங்கள்!' என்று கோட்டைக் காவலன் பூட்டுவதற்காகச் சொல்லிக் கொண்டுவந்தான்.

'தம்பி! சரி! வா! நேரமாகிறது நாளைக்கு எல்லாம் சொல்லுகிறேன்." என்றார் தாத்தா.

---

## திருமணம்

கடந்த 9-9-1948 வியா
ழமையன்று திருவாரூ
தோழர். ப. சிங்காரம் அ
களும், மன்னார்குடி தோழி
ரெ. செண்பகத்திற்கும், திரு
ரூரில் நாகை வழக்கறி
T. K. விஜயராகவலு அவ
ளின் தலைமையில் தன் ம
பியக்க முறைப்படி வாழ்க்
ஒப்பந்தம் நடந்தேறிய
தோழர்கள் திருக்குறள் மு
சாமி, மு. கருணாநிதி, தில்
வில்லாளன் மற்றும் பலர் செ
பொழிவாற்றினர்.

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Ho